தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 149, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. சிவகாமசுந்தரி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**149—**

## வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

***11729—திருமதி க. சிவகாமசுந்தரி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி, தரகம்பட்டியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி, தரகம்பட்டியில் வட்டாரப் போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகம் அமைக்க வேண்டிய தேவை எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. சிவகாமசுந்தரி அவர்கள்.

**திருமதி க. சிவகாமசுந்தரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் சட்டமன்றப் பேரவைத் தொகுதியில் கடவூர் வட்டம் 2010 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. கடவூர் வட்டத்தில் 23 வருவாய்க் கிராமங்கள் உள்ளன. இங்கு சுமார் 1,17,000 மக்கள் வசித்து வருகின்றனர். கடவூர் ஊராட்சி, கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதியின் கடைக்கோடி பகுதியான கடவூர் மலை அடிவாரப் பகுதியில் உள்ளது. இப்பகுதியிலிருந்து இரண்டு சக்கர, நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் கனரக வாகனங்களைப் பதிவு செய்ய, ஓட்டுநர் உரிமம் பெற மற்றும் புதுப்பிக்க, போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகம் செல்ல வேண்டுமானால், சுமார் 60 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள குளித்தலைக்குச் செல்ல

*2022 ஏப்ரல் 21*]

வேண்டியுள்ளது. அதனால் மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே, கடவூர் வட்டத்தின் தலைமையிடமான தரகம்பட்டியில் போக்குவரத்து ஆய்வாளர் பகுதி அலுவலகம் அமைத்துத் தர அரசு ஆவன செய்ய வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், கடவூர் ஊராட்சிப் பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் ஏற்கெனவே குளித்தலை வட்டம், சத்தியமங்கலம் என்ற இடத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம் இயங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல், ஏற்கெனவே 60 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கரூருக்குச் சென்று வந்தார்கள். இப்போது சத்தியமங்கலம் 33 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

முற்பகல் 10–55

மேலும், தரகம்பட்டி பகுதியில் 228 போக்குவரத்து வாகனங்கள், 4,525 போக்குவரத்து அல்லாத வாகனங்கள் மட்டுமே உள்ளன. ஒரு புதிய பகுதி அலுவலகம் அமைக்க வேண்டுமென்றால், குறைந்தபட்சம் 2,500 போக்குவரத்து வாகனங்களும், 7,500 போக்குவரத்து அல்லாத வாகனங்களும் இருக்க வேண்டும். எனவே, இந்தப் பகுதியில் தற்போது புதிய அலுவலகம் அமைக்க வேண்டிய தேவை எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. சிவகாமசுந்தரி அவர்கள்.

**திருமதி க. சிவகாமசுந்தரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் போக்குவரத்து வாகனம் மற்றும் போக்குவரத்து அல்லாத வாகனங்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளதால் தரகம்பட்டி பகுதியில் போக்குவரத்து ஆய்வாளர் பகுதி அலுவலகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லையென்று குறிப்பிட்டுள்ளார்கள். கடவூரிலிருந்து குளித்தலை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் சுமார் 55 கி.மீ. தொலைவில் உள்ளது. அங்கு சென்றுவர பொது

மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, தூரத்தினையும், அந்தப் பகுதியின் வளர்ச்சியினையும் கணக்கில்கொண்டு, மறுபரிசீலனை செய்து, தரகம்பட்டி பகுதியில் போக்குவரத்து ஆய்வாளர் பகுதி அலுவலகம் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதியின் தென்பகுதி எல்லையான கடவூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள ஊராட்சிப் பகுதிகளில் வசிக்கும் மக்கள், கிருஷ்ணராயபுரம் தொகுதியின் தலைமையிடமான கிருஷ்ணராயபுரம் பகுதிக்கு வந்து செல்ல பேருந்து வசதிகள் ஏதும் இல்லாததால், மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு கடவூரிலிருந்து தரகம்பட்டி, உடையாப்பட்டி, சேங்கல், முனையனூர், பழைய ஜெயங்கொண்டம் வழியாக கிருஷ்ணராயபுரம் வரை புதிய பேருந்து வழித்தடமும், கிருஷ்ணராயபுரம், பழைய ஜெயங்கொண்டம் மற்றும் முனையனூர் சுற்றுப்புற கிராமங்களில் வசிக்கும் மக்கள் கரூரிலுள்ள Textile நிறுவனங்களுக்கு வேலைக்குச் சென்றுவர ஏதுவாகவும், அப்பகுதிகளிலுள்ள மாணவ–மாணவியர், பள்ளி மற்றும் கல்லூரிகளுக்குச் சென்றுவர ஏதுவாகவும், கிருஷ்ணராயபுரத்திலிருந்து தாராபுத்தனூர், குச்சிப்பட்டி, சேவகனூர், நடுப்பட்டி, கோவில்பட்டி, உப்பிடமங்கலம் வழியாக கரூர் வரை புதிய பேருந்து வழித்தடமும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருகில்தான் இருக்கிறார்கள், புதிய வழித் தடங்கள் அமைப்பதற்கான கோரிக்கையினை தாங்கள் கடிதத்தில் எழுதிக் கொடுத்துவிடுங்கள். மாண்புமிகு அமைச்சர், வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குப் பதில் சொல்லுங்கள்.

**திருமதி க. சிவகாமசுந்தரி:** மேற்படி பேருந்து வழித்தடங்களை அமைத்துத் தர வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்

*2022 ஏப்ரல் 21]*

*அவர்களின் கோரிக்கையின்படி, புதிய அலுவலகம் ஏற்படுத்த வேண்டுமென்றால், போதிய அளவு வாகனங்களின் எண்ணிக்கை இருக்க வேண்டும். ஏற்கெனவே தமிழகத்தில் 12 சரக அலுவலகங்களும், 2 செயலாக்க இணைப் போக்குவரத்து அலுவலகங்களும், 91 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களும், 54 பகுதி அலுவலகங்களும் இருக்கின்றன. எனவே, வாகனங்களின் எண்ணிக்கை பெருகுகின்றபோது, அதன் தேவையினைப் பொறுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் அனுமதியைப் பெற்று, அங்கு அலுவலகம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கெனவே மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இதை வலியுறுத்தி வருகின்றார். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும். அதேபோன்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்கள் தொகுதிக்கு பேருந்து வசதி கேட்டார்கள். அவர், ஒரு சுற்றுப் பயணம் செல்ல வேண்டிய அளவிற்கு, கிட்டத்தட்ட தொகுதியில் இருக்கின்ற அனைத்து கிராமங்களையும் குறிப்பிட்டுவிட்டார் என்று எண்ணுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்கு தனி கடிதமாகக் கொடுத்தால், அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், திரு. S.S. பாலாஜி அவர்கள்.*

**திரு. S.S. பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு வட்டாரப் போக்குவரத்து அலுவலக எல்லைக்குள் இருக்கக்கூடிய பகுதியில், வாகனப் பெருக்கம் மிக அதிகமாக இருக்கக்கூடிய சூழலில், திருப்போரூரில் ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அல்லது குறைந்தபட்சம் ஒரு பிரிவு அலுவலகம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பதிலில் குறிப்பிட்டதைப்போல், 2,500 போக்குவரத்து வாகனங்களும்,*

7500 போக்குவரத்து அல்லாத வாகனங்களும் அந்தப் பகுதியில் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களது கோரிக்கை குறித்து, கணக்கெடுப்பு செய்யப்பட்டு, தேவை ஏற்படின், அந்த அலுவலகம் அமைத்துத் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 150, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**150—**

**பால் பதப்படுத்தும் நிலையம்**

***9759—திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருகம்பாக்கம் தொகுதியில் பால் பதப்படுத்தும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவள்ளூர் மாவட்டம், விருகம்பாக்கம் தொகுதியில் பால் பதப்படுத்தும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா அவர்கள்.

**திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களது அரசு அமைந்த நாள் முதல், ஆவின் பொருட்கள் விற்பனையில் பல வரலாற்று சாதனைகளைப் புரிந்துகொண்டிருக்கிறார். அந்தவகையில் விருகம்பாக்கம் தொகுதியைப் பொறுத்தவரையில், கோயம்பேடு ஒரு மையப் பகுதியாக உள்ளது. சென்னையில் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளான அம்பத்தூர்,